பெயர்: ............................ தேதி: ............................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

பகுதி_1

**சான்று:-** என் வயது பத்து.

- ☐ உன் வயது எப்படி?
- ☑ உன் வயது என்ன?
- ☐ உனக்கு எப்பொழுது பிறந்தநாள்?

1. எனக்கு முளைத்துள்ள பற்கள் இருபது.
   - ☐ உனக்கு எப்படி பற்கள் முளைத்துள்ளன?
   - ☐ உனக்கு முளைத்துள்ள பற்கள் எத்தனை?
   - ☐ பற்கள் நான்கு வகையா?
2. ஆமாம்! எனது பாட்டி கதை கூறுவார்கள்.
   - ☐ உனது பாட்டி எவ்வளவு கதை கூறுவார்கள்?
   - ☐ உனது பாட்டி எப்படிக் கதை கூறுவார்கள்?
   - ☐ உனது பாட்டி கதை கூறுவார்களா?
3. நான் வீட்டில் பேசும் மொழி தமிழ்.
   - ☐ நீ வீட்டில் பேசும் மொழி எது?
   - ☐ நீ வீட்டில் பேசும் மொழிகள் எத்தனை?
   - ☐ நீ தமிழ் மொழி பேசுவாயா?
4. என் தாத்தா சிறு வயதில் தஞ்சாவூரில் வசித்தார்.
   - ☐ உன் தாத்தா எவ்வாறு இருப்பார்?
   - ☐ உனது தாத்தா எங்கே வசிக்கின்றார்?
   - ☐ உன் தாத்தா சிறு வயதில் எந்த ஊரில் வசித்தார்?

பெயர்: ........................... தேதி: ...........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

1. எனது வீட்டிற்கு அருகில் எனக்குப் பிடித்த இடம் பூங்கா.

- ☐ நீ யாருடன் பூங்காவிற்குச் செல்வாய்?
- ☐ உனது வீட்டிற்கு அருகில் உனக்குப் பிடித்த இடம் எது?
- ☐ உனக்குப் பூங்காவைப் பிடிக்குமா?

2. ஆமாம்! எனக்கு என் வீட்டின் முகவரி தெரியும்.

- ☐ உன் வீட்டின் முகவரி எத்தனை?
- ☐ உன் வீட்டின் முகவரி என்ன?
- ☐ உனக்கு உன் வீட்டின் முகவரி தெரியுமா?

3. இல்லை! நான் என் நிழலைப் பார்த்தது இல்லை.

- ☐ நீ உன் நிழலைப் பார்த்து இருக்கிறாயா?
- ☐ உனது நிழலை எப்போது பார்த்தாய்?
- ☐ உனது நிழல் உன் கூடவே வருமா?

4. என் பள்ளி எனது வீட்டிற்கு தொலைவில் உள்ளது.

- ☐ உன் பள்ளி எப்படி உள்ளது?
- ☐ உனது பள்ளி எங்கே உள்ளது?
- ☐ உன் பள்ளி உனது வீட்டிற்கு அருகில் உள்ளதா?

5. நான் பிறருக்கு உதவி செய்வேன்.

- ☐ நீ பிறருக்கு என்ன உதவி செய்வாய்?
- ☐ உடன் பயிலும் மாணவனுக்கு உதவி செய்வாயா?
- ☐ நீ பிறருக்கு உதவி செய்வாயா?